'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் XVI | மே கி.பி. 2025 | சான்று : 185



## எதிர்நோக்கின் அன்னை மரியா

அருளமுது ஆதாரக்குழு கூடுகை



அருள்சான்று நிலையம்



அமைதியகம்



பொதுநிலையினர் பயிற்சி திண்டுக்கல்

புதிய பணியாளர்கள் பயிற்சி



காளையார்கோவில்



சிவகங்கை



அருள்சான்று நிலையம்

**பாசத்திற்குரிய உடனுழைக்கும் நற்செய்திப் பணி குடும்பமே,**

நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி. கண்ணுக்குப் புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை (எபி 11:1) என்ற நம்பிக்கைக் கோட்பாட்டைப் பின்பற்றி நானும் நீங்களும் எதிர் நோக்கின் திருப்பயணிகளாக வாழ வாழ்த்துகிறேன். செபிக்கிறேன்.

இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு நம்மை எதிர் நோக்கின் திருப்பயணிகளாக வாழத் தொடர்ந்து அழைப்பு விடுக்கிறது. 'நம்பிக்கை எனும் நெருப்பை நாம் தொடர்ந்து பற்றி எரியச் செய்ய வேண்டும். பெருந்தொற்று, போர்கள், கடினமான பொருளாதார சூழல்கள், தான்தோன்றித்தனமான அரசியல் போக்குகள் போன்றவற்றை நாம் எதிர்கொள்ள வேண்டுமெனில் நம்பிக்கை எனும் திரியை அணையாமல் பிடித்துக் கொள்ள வேண்டும்' என்று திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு விடுத்திருக்கிறார்.

இணைந்து பயணிக்கும் திரு அவைக்கான (கூட்டு ஒருங்கியக்கத் திரு அவை) மாமன்றத்தின் இரண்டு அமர்வுக்கான நிவுற்றவுள்ள இவ்வேளையில் நம் தாய் திரு அவை இயேசு கிறிஸ்து பிறந்த கிபி 2025ஆம்ஆண்டை யூபிலி ஆண்டாக அறிவித்து, 'நம்பிக்கையின் திருப்பணிகள்' என்னும் மையக்கருத்தில் பயணித்துக் கொண்டாட நம்மை அழைத்திருக்கிறது. இந்த யூபிலி ஆண்டு கிபி 2024 ஆம் ஆண்டு திருவருகை காலத்தோடு தொடங்கி 2026 ஆம் ஆண்டு திருக்காட்சி பெருவிழாவுடன் நிறைவடைகிறது.

திருஅவையில் சாதாரண யூபிலி ஆண்டு 25 ஆண்டுகளுக்கு ஒரு முறையும், சிறப்பு யூபிலி ஆண்டு குறிப்பிட்ட நோக்கத்திற்காக அவ்வப்போதும் கொண்டாடப்பட்டு வருகிறது. திரு அவை வரலாற்றில் கிபி 1300 ஆண்டுகள் வரை யூபிலி கொண்டாட்டங்கள் இருந்ததாகத் தெரியவில்லை. 13 ஆம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் உலகில் பல பகுதிகளில் கொள்ளை நோய்களும், போர்களும் மக்களை வாட்டி வதைத்தன. எனவே பல பொது நிலை நம்பிக்கையாளர்கள் இறைவனின் இரக்கத்தையும் மன்னிப்பையும் தேடி திருத்தூதர்களான புனித பேதுரு, புனித பவுல் ஆகிய இருவரின் கல்லறைகளில் கூடி செபிக்க தீர்மானித்தனர். அதனை நிறைவேற்ற உரோம் நோக்கி திருப்பயணம் மேற்கொண்டனர். பல்லாயிரம் பொதுநிலை நம்பிக்கையாளர்கள் கிபி 1299 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் விழாவன்று உரோம் நகரை அடைந்தனர். அந்த எண்ணிக்கை 2 லட்சத்துக்கும் அதிகமாக இருந்ததாக வரலாற்று குறிப்புகள் கூறுகின்றன.

எந்த திருநிலையினரின் தூண்டுதல் இல்லாமல் மக்கள் தன்னெழுச்சியாக மேற்கொண்ட இந்த முயற்சிகளை கண்ட திருத்தந்தை எட்டாம் போனிபாஸ் அவர்கள் கிபி 1300 ஆம் ஆண்டினை பாவ மன்னிப்பு ஆண்டாக அறிவித்தார். இதுவே முதல் யூபிலி ஆண்டாகும். இதை 100 ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாட வேண்டுமென அவர் வழிமுறை வகுத்தார்.

அவருக்குப் பின் வந்த திருத்தந்தையர்கள், ஒருவரது வாழ்வில் ஒருமுறையாவது யூபிலி ஆண்டை கொண்டாட வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று 25

ஆண்டுகளுக்கு ஒருமுறை கொண்டாட வழிவகை செய்தனர். கிபி 2025 ஆம் இந்த ஆண்டு 27 வது சாதாரண யூபிலி ஆண்டு ஆகும். அந்த வரலாறு சிறப்புமிக்கது. அதனை நாம் திருஅவை வரலாறு என்ற புத்தகங்களில் வாசித்து அறியலாம்.இவை தேடல் வெளியீடு மூலம் வெளிவந்திருக்கிறது. சிறப்பு யூபிலி ஆண்டுகளையும் சேர்த்தால் நம் கத்தோலிக்க திருஅவையில் 65 சிறப்பு யூபிலி ஆண்டுகள் இடம் பெற்றுள்ளன என்று வரலாற்று குறிப்புகள் கூறுகின்றன. 21ஆம் நூற்றாண்டில் முதல் சிறப்பு யூபிலிஆண்டாக இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டு நமக்கு நினைவிருக்கும் என்று நம்புகிறேன். அதுதான் 65 ஆவது சிறப்பு யூபிலி ஆண்டு.

கிபி 2025 யூபிலிக் கொண்டாட்டத்தின் தயாரிப்பாக 2023 ஆம் ஆண்டு சங்க ஏடுகளின் ஆண்டு என்று அழைத்து கிபி 1962 முதல் கிபி 1965 ஆண்டு வரை நடைபெற்ற இரண்டாவது வத்திக்கான் சங்கத்தின் முக்கிய 4 கொள்கை திரட்டுக்குளை மறு வாசிப்பு செய்ய திரு அவை அழைத்தது.

**1. திருவழிபாடு:** இது வழிபாட்டு சீர்திருத்தத்தையும், நவீன உலகின் தேவைகளுக்கு ஏற்ப வழிபாட்டு முறையை புதுப்பித்து மாற்றி அமைக்கவும் அறிவுறுத்துகிறது. இந்த கொள்கையால் தான் வட்டார மொழிகளில் வழிபாடுகள் மாற்றி அமைக்கப்பட்டன. பொருள் உள்ள விதங்களில் பொதுநிலையினரும் திருநிலையினரும் இணைந்து, பொருள் உணர்ந்து வழிபாட்டு கொண்டாட்டங்களில் பங்கேற்க உதவியது. திருநிலையினர் மட்டுமே பேசி, பொது நிலையினர் அமைதியாக இருப்பதும் சிறந்த வழிபாடாகாது என்பதை புரிய வைத்தது. பல மாற்றங்களுக்கு வழி வகுத்தது .இந்த ஏட்டை நாம் ஒவ்வொருவரும் வாசித்தே ஆக வேண்டும்.

**2. திரு அவை:** இது திரு அவையின் தன்மையை மையமாகக் கொண்டுள்ளது. பொதுநிலையினர், திருநிலையினர் ஆகிய அனைவரும் இறைமக்கள் என்ற கருத்தியலை வலியுறுத்துகிறது. நம் மேதகு ஆயர், நமது தவக்கால திறனாய்வில் கூறியது போல 'பொது நிலையினருக்கு பணி செய்யவே திருநிலையினர் 'என்ற மையக்கருத்து இழையோடுகிறது. சமத்துவ நிலையையும் இரு சாராரின் பங்களிப்பையும் இது உறுதி செய்கிறது. நமது திருத்தந்தை பணியாளர்களின் பணியாளர் என்று கையொப்பமிடுவது இதன் அடிப்படையிலேயே ஆகும். பிற கிறிஸ்தவ சபைகளுடனான உறவு ஒன்றிப்பையும் வழியுறுத்துகிறது. எனவே படித்து புரிந்து கொள்வது நமது கடமை. எந்த ஏற்றத்தாழ்வுமின்றி உயர்வு தாழ்வின்றி திருஅவை இணைந்து பயணிக்க வேண்டும் என்ற மையக்கருத்தை இது தெளிவாக எடுத்துரைக்கிறது.

**3. இறை வெளிப்பாடு:** இந்தக் கொள்கைத் திரட்டு திரு அவையின் வாழ்க்கையில் இறைவார்த்தையின் பங்களிப்பை எடுத்துரைக்கிறது. திருவிவிலியம் தான் நற்செய்தி பணியாளர்களாகிய நமக்கு மையம். இறை வார்த்தை ஒளியில் நம்மிடம் உள்ள தீமைகளை களைந்து சமுதாய தீமைகளை களைதல் என்ற நமது இலட்சிய நோக்கின் முழுமையை இந்நூல் விவரிக்கிறது. இறை வார்த்தையை அன்றாடம் வாசித்து, கற்றுக்கொண்டு, தியானித்து, வாழ்வாக்குவதை இது உறுதிப்படுத்துகிறது. திருவிவிலியத்திற்கும் பாரம்பரியத்திற்கும் இடையிலான உறவை தெளிவுபடுத்துகிறது. எனவே இந்த கொள்கைத் திரட்டை நாம் கண்டிப்பாக வாசித்து அறிந்திருக்க வேண்டும்.

**4. இன்றைய உலகில் திரு அவை:** இந்த க் கொள்கைத் திரட்டு. இன்றைய உலகத்தோடு திரு அவையின் உறவைப் பற்றி பேசுகிறது. மனித உரிமைகள், சமூக நீதி, அமைதியான நீதியுள்ள சமுதாயத்தை உருவாக்குதல் ஆகியவற்றில் திரு அவையின் பொறுப்பு, நவீன காலத்தின் சவால்களை எதிர்கொள்ள வேண்டிய வழிமுறைகளை எடுத்தியம்புகிறது.

திருஅவை அழைப்பிற்கு ஏற்ப மேலே சொல்லப்பட்ட நான்கு முக்கிய இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகளை கிபி 2023 ஆம் ஆண்டிலேயே படித்து முடித்து இருக்க வேண்டும். எத்தனை பேர் அதை படித்திருக்கிறோம்? என்பதைப் பற்றிய தெளிவு எனக்கு இல்லை. நமது ஆண்டு தியானங்களில் இந்த நான்கு ஏடுகள் மட்டும் உள்ள புத்தகங்களை வைத்திருந்தோம். எத்தனை பேர் அதை வாங்கிச் சென்றோம்? அதை வாசித்தோம்? என்பதும் தெரியவில்லை. ஆனால் கிபி 2025 யூபிலி ஆண்டை கொண்டாட இந்த நான்கு ஏடுகளையும் வாசித்து உணர்வது மிக மிக அவசியம். எனவே 2024 ஆம் ஆண்டு என்ன செய்ய வேண்டும் என்பதையும் திருத்தந்தை கூறி இருந்தார். நாம் முதலில் இதை தயாரித்தால் தானே அடுத்த தயாரிப்புக்குப் போக முடியும் .இதைப்பற்றிய செய்தியை அடுத்த இதழில் சிந்திப்போம். யூபிலிகிபி 2025க்கு நம்மை முறையாக தயாரிப்போம். ஒருவர் ஒருவருக்கு அறிவுறுத்துவோம்.

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரன்

**நற்பணி அ. சகாயராஜா**

ஏப்ரல் 2025 | புதிய பணியாளர்கள் பயிற்சி

⊙ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - I பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 6.04.2025 அன்று நடைபெற்றது. 3 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி G.M.S. ராணி, நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⊙ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி -II காளையார்கோவில், தந்தை ஜோசப் சேவியர் அரங்கில் 6.04.2025 அன்று நடைபெற்றது. 5 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி S. மோட்ச அலங்காரம், நற்பணி V.செங்கோல்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⊙ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி -III இராமநாதபுரம் புனித செபமாலை அன்னை ஆலயத்தில் 13.04.2025 அன்று நடைபெற்றது. 7 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி S. மோட்ச அலங்காரம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⊙ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - IV தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கோவிலில் 26.04.2025 அன்று நடைபெற்றது. 4 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி X. லூர்துமேரி, நற்பணி J. ரபேக்கா ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⊙ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி – V சிவகங்கை வியான்னி அருள்பணி மையத்தில் 27.04.2025 அன்று நடைபெற்றது. 8 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை M. மரியகிரகோரி, நற்பணி A. யூஜின் அமல்ராஜ், நற்பணி A. பிரான்சிஸ் சேவியர் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - VI ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 27.04.2025 அன்று நடைபெற்றது. 4 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி A. சத்தியேந்திரன், நற்பணி S. அந்தோனி பிரகாஷ், நற்பணி இரா. அருள்பிரகாசம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⦿ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - VII அமைதியகம், காயாவயலில் 27.04.2025 அன்று நடைபெற்றது. 9 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை Sr. பச்சை ஜோதி, நற்பணி S. சகாயராணி, நற்பணி S. பால்ராஜ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⦿ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VIII சாயல்குடி, புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் 27.04.2025 அன்று நடைபெற்றது. 10 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி M. அருள்மரிய நாயகம், நற்பணி T. ஸ்டீபன் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⦿ சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IX இராசசிங்கமங்கலம், தூய ஆவியார் ஆலயத்தில் 27.04.2025 அன்று நடைபெற்றது. 14 பேர் கலந்து கொண்டனர்.இப்பயிற்சியை செயலர், நற்பணி S. தைனேஸ்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

⦿ தஞ்சை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -X திருமயம், புனித அடைக்கலமாதா ஆலயத்தில் 27.04.2025 அன்று நடைபெற்றது. 20 பேர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியை நற்பணி A. சகாயராஜா, நற்பணி L. ஆரோக்கியசாமி, ஆகியோர் வழிநடத்தினார்கள்.

## ஏப்ரல் 2025 கடந்த மாதச் செயல்பாடுகள்

02.04.2025 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 36 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி வியாகுலம், நற்பணி தைனேஸ்மேரி, நற்பணி இருதயமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

02.04.2025 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 75 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி M. சேவியர், நற்பணி S.கரோலின் எமலி, நற்பணி ஆரோக்கியசாமி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

05&06.04.2025 ஆகிய தேதிகளில் தவக்கால தியானம் கொம்படிமதுரை பங்கில் நடைபெற்றது. செயலர், நற்பணி சகாயராஜா, நற்பணி சத்தியேந்திரன், நற்பணி சகாயராணி வழிநடத்தினார்கள்.

06.04.2025 ஆகிய நாட்களில் தவக்காலத் தியானம் நகரிக்காத்தான் பங்கில் நடைபெற்றது. செயலர், நற்பணி விசுவாசம், ஆகியோர் வழிநடத்தினார்கள்

11&12.04.2025 ஆகிய நாட்களில் தவக்காலத் களப்பணி திறனாய்வு அமைதியகத்தில் நடைபெற்றது. இத்திறனாய்வு மேதகு ஆயர் லூர்து ஆனந்தம் தலைமையிலும், பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளர் அருள்பணி செபஸ்தியான் முன்னிலையில் நடைபெற்றது. இத்திறனாய்வில் 105 பணியாளர்கள் கலந்து கொண்டார்கள்.

15.04.2025 அன்று தவக்காலத் தியானம் வலையம்பட்டி பங்கில் நடைபெற்றது செயலர், நற்பணி ஆரோக்கியசாமி, நற்பணி இராஜேந்திரன், நற்பணி ஆரோக்கியமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

'எந்நிலையிலும் நம்பிக்கையென்னும் கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள். அதைக் கொண்டு தீயோனின் தீக்கணைகளையெல்லாம் அணைத்து விட முடியும்' (எபே6:16).

நம்பிக்கை என்பது நம் கிறிஸ்தவ வாழ்விற்கு நங்கூரம் போன்றது என்று தியானித்தோம். சமீபத்தில் குடும்ப நண்பர் ஒருவரைச் சந்தித்தேன். அவர் எதிர்கால திட்டங்களைக் குறித்து நிறைய சொல்லிக் கொண்டிருந்தார். நான் பதில் ஏதும் சொல்லாமல் அமைதியாக சிரித்துக் கொண்டே கேட்டுக் கொண்டிருந்தேன். அவர் என்ன ஒன்றுமே சொல்லாமல் இருக்கிறீர்கள் என்றார். நான் இதை எல்லாம் கேட்பதற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது கடவுளுக்குத் திருவுளமானால் நடக்கும் என்றேன். உடனே அவர் நடக்கும் என்று நம்புவோம். நம்பிக்கைதானே வாழ்க்கை என்றார்.

'ஆபிரகாம் ஆண்டவர் மீது நம்பிக்கை கொண்டார். அதை ஆண்டவர் அவருக்கு நீதியாகக் கருதினார்.' (தொநூ15:6) அந்த சகோதரர் சொன்னது போல ஆபிரகாம் இறை நம்பிக்கைதான் வாழ்க்கை என்று வாழ்ந்தார். அதனால் தான் ஆண்டவர் அவரை நீயே ஆசியாக விளங்குவாய் என்று ஆசீர்வதித்தார். ஆண்டவர்மீது நாம் கொள்ளும் நம்பிக்கை நமக்கு விண்ணக ஆசிகளை மட்டுமல்லாது மண்ணக ஆசிகளையும் கொண்டு வரும் என்பதற்குச் சான்றாக நம் கண் முன் நிற்பவர் ஆபிரகாம்.'ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்துள்ளோர் சீயோன் மலை போல் என்றும் அசையாது இருப்பர்.'(திபா125:1) என்று தாவீது கூறுவது போல ஆபிரகாம் ஆண்டவர் மீது நம்பிக்கை வைத்ததனால் எல்லா சூழ்நிலையிலும் கலங்காமல் திகையாமல் மலை போல் அசையாது இருந்தார். அதனால்தான் ஆண்டவர் தன்னை ஆபிரகாமின் கடவுள் என்று மோசேயிடம் அறிமுகம் செய்து கொண்டார். இன்னாருடைய பிள்ளை என்பதை விட இன்னாருடைய தந்தை என்று அறிமுகப்படுத்தப்படுவது தந்தைக்குப் பெருமை. அத்தகைய பெருமையோடு தந்தை கடவுள் நம்மையும் அறிமுகம் செய்து கொள்ள நாம் ஆபிரகாமை போல் நம்பிக்கை என்னும் கேடயத்தை இறுகப் பற்றிக் கொள்வோம். ஏனென்றால் நமக்கு வாழ்வு தருவது நமது நம்பிக்கையே.

'தீமையான செய்தி எதுவும் அவர்களை அச்சுறுத்தாது; ஆண்டவரில் நம்பிக்கை கொள்வதால் அவர்கள் இதயம் உறுதியாய் இருக்கும்'(திபா112:7) ஆண்டவர் ஆபிரகாமிடம் உன் மகன் ஈசாக்கை நீ எனக்கு பலியாக தர வேண்டும் என்று கேட்டார். ஒரு மனிதனுக்கு இதைவிடத் தீமையான செய்தி ஏதாவது உண்டா? உள்ளத்தை உடைக்க கூடிய இந்த தீமையான செய்தியைப் பெற்ற ஆபிரகாம் அதற்காக அஞ்சவில்லை கலங்கவில்லை. அப்படியே செய்கிறேன் என்று பலிக்கான ஏற்பாடுகளை உடனே செய்தார். ஆண்டவரில் நம்பிக்கை கொண்டதால்தான் அவருடைய இதயம் உறுதியாக இருந்தது. நாம் எப்படி இருக்கிறோம்? சிறிய அளவில் தீமையான செய்தி எதையாவது கேட்டாலே உள்ளம் உடைந்து கவலையால் துவண்டு விடுகின்றோம். உடனே அவிசுவாசமான வார்த்தைகளை உதிர்க்க

ஆரம்பித்து விடுகிறோம். எதை அறுவடை செய்வோம். விதைத்ததை தானே அறுவடை செய்வோம். இதைத்தான் எசாயாவும் நம்பிக்கை கொண்டோர் பதற்றமடையான் என்கிறார் (எசா28:16).

நாம் நற்செயல்கள் செய்வதற்கும் நலமான வாழ்வு வாழ்வதற்கும் பாவம் செய்யாமல் இருப்பதற்கும் நமக்கு ஆற்றலும் பலனும் தருவது கடவுள் மீது நாம் கொள்ளும் நம்பிக்கை தான். அதைத்தான் புனித பவுலும் 'திருச்சட்டம் சார்ந்த செயல்களால் அல்ல இயேசுவின் மீது கொள்ளும் நம்பிக்கையின் வாயிலாகவே எவரும் கடவுளுக்கு ஏற்புடையவராக முடியும் எனக் கருதுகிறோம்' (உரோ3:28) என்று கூறுகிறார். திருச்சட்டம் சார்ந்த செயல்களுக்கு நம்மை இட்டுச்செல்வது நமது நம்பிக்கை தான். நாம் கொண்டுள்ள நம்பிக்கை உறுதியானதாக இருந்தால் நம் இயல்புகள் பாவநாட்டங்களை விட்டு விலகும். சாத்தான் நம்மை நோக்கி வீசும் தீக்கணைகளாகிய பாவநாட்டங்களை, போதனைகளை எதிர்த்து நிற்கவும் அவை நம்மை தாக்காதிருக்க நம்மிடம் நம்பிக்கை என்னும் கேடயம் உறுதியானதாக இருக்க வேண்டும். நம்பிக்கை என்னும் கேடயத்தைஉறுதியாகப் பற்றிக் கொண்டிருந்தோமென்றால் சாத்தானின் தீக்கணைகள் அதில் பட்டு சிதறி ஓடிவிடும். போர்க்காலங்களில் எதிரி நாட்டினர் வீசும் ஏவுகணைகளை வானிலேயே இடைமறித்துத் தாக்கி அழிக்கும் ஏவுகணைகள் பற்றி நாம் படித்திருக்கிறோம். அப்படி நமக்குள் சாத்தான் ஏவிவிடும் அவநம்பிக்கை என்னும் தீக்கணை நம்மை அணுகுவதற்கு முன்பாகவே தடுத்து நிறுத்த நம்முடைய நம்பிக்கைக் கேடயத்தை இறுக பற்றிக் கொள்ளும் வலிமை வேண்டும்.

'நமக்கு அஞ்சி நடந்து தம்பேரன்புக்காக நம்பிக்கையுடன் காத்திருப்போரிடம் அவர் மகிழ்ச்சி கொள்கிறார்.' (திபா 147:11) ஆண்டவரின் பேரன்புக்காக நம்பிக்கையுடன் காத்திருக்கும் நம்மை பார்த்து ஆண்டவர் மகிழ்ச்சி கொள்கிறார். ஆண்டவரை மகிழ்ச்சி படுத்துகிற ஆற்றல் நாம் அவர் மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கு இருக்கிறது. ஆண்டவர் மீது நான் கொள்ளும் அசைக்க முடியாத நம்பிக்கையினால் மட்டுமே அவருக்கு உகந்தவற்றை செய்ய நம்மை கரம்பிடித்து நடத்திச் செல்ல முடியும். நம்பிக்கை இல்லாதவர்கள் நாணலைப்போல அங்கும் இங்கும் அலைகழிக்கப்படுவர். தூய வாழ்வு வாழ்வதற்கு நம்மை இட்டுச் செல்வது நம் நம்பிக்கையே. ஆண்டவரில் முழுநம்பிக்கையில்லாதவர் எதையுமே அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளவே முடியாது. என்னுடைய நற்செய்தி பணிக்கு அடிப்படையும் ஆதாரமும் நமது நம்பிக்கைதான். எப்பொழுதெல்லாம் நம்முடைய நம்பிக்கை குறைவுபடுகிறதோ அப்போது உயர்த்திப் பிடிக்க வேண்டிய பாதுகாப்புக்கேடயம் தளர்ந்து விடும். சாத்தான் ஏவும் சோதனைகளாகிய தீக்கணைகள் நம்மை எளிதாகத் தாக்கி விடும். நம்பிக்கை வாழ்வு தான் நம் ஆவிக்குரிய வாழ்வுக்குக் கேடயம். எனவே நம்பிக்கை என்னும் கேடயத்தை இறுகப் பற்றிக் கொள்வோம். ஆவிக்குரிய வெற்றி வாழ்க்கை வாழ அர்ப்பணிப்போம்.

நற்பணி **ச.சகாயராணி**, இராம்நகர்.

எவரும் பழைய ஆடையில் புதிய துணியை ஒட்டுப் போடுவதில்லை (மாற் 2:21). யோவானுடைய சீடரும் பரிசேயருடைய சீடரும் நோன்பு இருக்கும்போது உம்முடைய சீடர் மட்டும் ஏன் நோன்பு இருப்பதில்லை? என்று சிலர் ஆண்டவரிடம் வந்து கேள்வி கேட்டார்கள். அதற்கு அவர் மணமகன் தங்களோடு இருக்கும் வரை அவர்கள் நோன்பிருக்க முடியாது. மணமகன் அவர்களை விட்டு பிரிய வேண்டிய காலம் வரும் அப்போது அவர்களும் நோன்பு இருப்பார்கள் என்று பதில் கூறிவிட்டு எவரும் பழைய ஆடையில் புதிய துணியை ஒட்டுப் போடுவதில்லை. அவ்வாறு ஒட்டுப் போட்டால் அந்தப் புதிய துணி பழையதிலிருந்து கிழியும். கிழிசலும் பெரிதாகும் என்றார் (மாற் 2:18-22). நோன்பு பற்றிய அவர்களின் கேள்விக்கு ஆண்டவர் அளித்த பதில் சரியானதா? பழைய ஏற்பாடு மேசேயின் வழியாகக் வரவிருந்த புதிய ஏற்பாட்டின் நிழலாக உள்ளது. அதை விளக்குவதற்காகவே அவர் இவ்வாறு கூறுகிறார். பழைய ஏற்பாடு மோசேவின் வழியாக கற்பலகைகளைக் கொண்டு கடவுளால் எழுதிக் கொடுக்கப்பட்டது (விப 24:12) புதிய ஏற்பாடு நம் உள்ளமாகிய இதயப் பலகையை தூய ஆவியானவரால் எழுதப்பட்டுள்ளது (2 கொரி 3:3). எனவேதான் திருச்சட்டம் மோசே வழியாகக் கொடுக்கப்பட்டது. அருளும் உண்மையும் இயேசு கிறஸ்து வழியாக வெளிப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது (யோவா 1:17) பழைய ஏற்பாடு சட்டம் சார்ந்தது. புதிய ஏற்பாடு அருள் நிறைந்த அறியணையைக் கொண்டுள்ளது. திருச்சட்டம் வழியாய் பாவம் பெருகியது. குற்றம் செய்ய வாய்ப்புப் பெருகும்படி சட்டம் இடையில் நுழைந்தது. ஆனால் புதிய ஏற்பாடு எந்த மனிதரின் பாவத்தையும் மூடும்படி அருள் பொங்கி வழிந்தது (உரோ 5:20). மோசேயின் வழியாய்க் கொடுக்கப்பட்ட பத்துக் கட்டளைகளை யாராலும் கடைபிடிக்க முடியவில்லை. பத்துக் கட்டளைகளில் ஒன்பதை கடைபிடித்து ஒன்றை தவறவிட்டாலும் அதனால் ஒரு பயனும் இல்லை. ஏனெனில் ஒருவர் சட்டம் ஒன்றில் மட்டும் தவறினாலும் அவர் அனைத்தையும் மீறிய குற்றத்திற்குள்ளாவர் (யாக் 2:10). பழைய ஏற்பாட்டில் ஒவ்வொரு கட்டளைகளும் யாரும் கடைபிடிக்க முடியாத அளவுக்கு மிகவும் கடினமானதாக இருந்தது. எனவேதான் விபச்சாரத்தில் பிடிபட்ட ஒரு பெண்ணை ஆண்டவரிடம் அழைத்து வந்து இப்படிப்பட்டவர்களைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என்பது மோசே நமக்குக் கொடுத்த திருச்சட்டத்திலுள்ள கட்டளை. நீர் என்ன சொல்கிறீர்? என்று அந்தச் சட்டத்தை எழுதிக் கொடுத்தவரையே கேட்டார்கள் (யோவா 8:3:5). கற்களில் பொறிக்கப்பட்ட அச்சட்டம் சாவை விளைவிக்கக் கூடியதாயிருந்தது (2கொரி 3:7). கட்டளைத் தந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பாவம் என்னை ஏமாற்றி அந்த கட்டளை வழியாகவே என்னைக் கொன்றுவிட்டது என பவுல் குறிப்பிடுகிறார் (உரோ 7:11). ஆனால் புதிய ஏற்பாடு பல கட்டளைகளையும் விதிகளையும் கொண்ட யூதச் சட்டத்தை அழித்தது (எபே 2:15) இரண்டாவதாக பழைய பாவ வாழ்க்கையை விட்டு விடாமல புதிய ஏற்பாட்டிற்குள் நுழைய முடியாது. எனவேதான் புதிய துணியோடு பழைய ஆடையை ஒட்டுப் போட்டால் அந்தப் புதிய துணி பழையதிலிருந்து கிழியும் கிழிசலும் பெரிதாகும் என்கிறார் (மாற் 2:21). ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்போது அவர் புதிதாகப் படைக்கப்பட்டவராய் இருக்கிறார்.

பழையன கழிந்து புதியன புகுந்தன அன்றோ (2 கொரி 5:17). யூதர்கள் திருச்சட்டம் படித்தார்கள். ஆனால் அவர்களால் கடைபிடிக்க முடியவில்லை. மக்களை கடைபிடிக்கும்படி கட்டாயப்படுத்தினார்கள்.

நம் ஆண்டவர் வந்து திருச்சட்டத்தில் மறைந்து கிடக்கிற உண்மைகளை எடுத்துச் சொன்னபோது அவர்களால் அதை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. எனவே ஆண்டவரை திருச்சட்டத்திற்கு எதிரானவராகப் பார்த்தார்கள். ஆனால் ஆண்டவர் திருச்சட்டத்தையோ இறைவாக்குகளையோ நான் அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ண வேண்டாம். அவற்றை நிறைவேற்றுவதற்காகவே வந்தேன் எனறார்( மத் 5:17). எனவேதான் பவுல் கிறிஸ்துதான் திருச்சட்டத்தின் நிறைவு எனக் குறிப்பிடுகிறார் (உரோ 10:4). எவ்வாறு அதை நிறைவேற்றினார்? வாழ்நாளெல்லாம் இந்த திருச்சட்டத்தைக் கடைபிடிக்க முடியாமல் சாவு பற்றிய அச்சத்தினால் அடிமைப்பட்டிருந்தவர்களை மீட்க ஊனும் இரத்தமும் கொண்ட நம்மைப் போல அவர் ஆனார். அதன் வழியாக நமக்குப் பதில் ஆளாக அவர் நின்று அதை நிறைவேற்றினார் (எபி 2:14-15). கிறிஸ்து உலகிற்கு வந்தபோது பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை. ஆனால் ஓர் உடலை எனக்கு அமைத்துத் தந்தீர். உமது திருவுளத்தை நிறைவேற்ற இதோ வருகின்றேன் என்றார். பின்னையதை நிலைக்கச் செய்ய முன்னையதை நீக்கிவிடுகிறார். இது பழைய ஏற்பாட்டிற்குப் புதிய ஏற்பாட்டிற்கும் உள்ள வேறுபாடு (எபி 10:5-9) நாம் பழைய பாவ வாழ்க்கையை நீக்கிவிட்டு புதிய வாழ்வுக்கு முற்றிலும் நம்மை அர்ப்பணிக்கும்போது நாம் எப்படி எதற்காக நோன்பு இருக்க வேண்டும் என் நோன்பு பற்றிய விளக்கத்தை தூய ஆவியானவர் நமக்குக் கற்றுத் தருவார். இந்த உண்மையை அறிந்துகொள்ள ஒரு முறை நிக்கதேம் என்பவர் ஆண்டவரிடம் வந்தபோது மறுபடியும பிறந்தாலன்றி எவரும் இறையாட்சியைக் காண இயலாது என்றார். ஆனால், நிக்கதேம் வயதானபின் ஒருவர் எப்படிப் பிறக்க இயலும் என்ற கேள்வியை எழுப்பியபோது ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியானவராலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது. நீர் இஸ்ரயேலின் மக்களிடையே போதகராய் இருந்தும் இந்த உண்மையை அறியாதிருக்கிறீரே என்று மிகவும் ஆதங்கப்பட்டார் (யோ 3:1-10). யாராலும் கடைபிடிக்க முடியாத திருச்சட்டத்தின் அனைத்துத் தண்டனைகளையும் தந்தை கடவுள் ஆண்டவர்மீது சுமத்தினார். பாவம் அறியாத அவரைப் பாவ நிலை ஏற்கச் செய்தார். (2 கொரி 5:21) இந்த நிலையில்தானன் கல்வாரி சிலுவையிலிருந்து தந்தையே ஏன் என்னைக் கைவிட்டீர்? என்று கதறினார். மரத்தில் தொங்கவிடப்பட்டோர் சபிக்கப்பட்டோர் என்று எழுதியுள்ளவாறு நமக்காகக் கிறிஸ்து சாபத்துக்கு உள்ளாகி நம்மைச் சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக் கொண்டார். (கலா 3:13) நாம் எந்த நிலையில் இருக்கிறோம்?. பழைய ஆடைகளோடு புதிய துணியை ஒட்டுப் போட்டுக் கொண்டு அலைகிறோமா என்பதை எண்ணிப் பார்ப்போம். அவரது வார்த்தைக்கு கீழ்படிகிறோமா? கிறிஸ்துவின் போதனையில் நிலைத்திராமல் வரம்பு மீறிச் செல்வோர் கடவுளைக் கொண்டிருப்பதில்லை. அவர் போதனையில் நிலைத்திருப்போரிடமே தந்தையும் மகனும் இருக்ககிறார்கள் (2 யோவா 9). எனவே பழைய ஆடையை முற்றிலும் அகற்றிவிட்டு தூய ஆவியானவர் தருகின்ற புதிய துணியை அணிந்து கொண்டு உண்மைக்கு என்றும் சான்று பகர்வோம்.

நற்பணி **ம.விசுவாசம்,** செஞ்சை.

அற்புதங்கள் செய்பவர்கள்தான் சிறந்த நற்செய்தி பணியாளர்கள் என்ற சித்திரம் மக்கள் மனங்களில் படிந்துள்ளதால் சிலர் இறைவார்த்தைக்கு முரணாக ஆதாரமற்ற வசனங்களைப் பேசி நடித்துக் கொண்டிருக்கிறார்கள். எந்த அற்புதமும் செய்யாத திருமுழுக்கு யோவானை 'மனிதராய் பிறந்தவர்களுள் பெரியவர்' (லூக் 7:28) என்று இயேசுவே சாட்சி கூறுகிறார். யோவானுக்கு வார்த்தையே அற்புதமாக இருந்தது. பழைய ஏற்பாட்டில் மிகப் பெரிய அற்புதங்களைச் செய்த எலியாவைப் போல, புதிய ஏற்பாட்டின் எலியாவாக ஆற்றலுடன் செயல்பட்டார். வார்த்தையால் யூதர்களை நடுநடுங்க வைத்தார். ஆடையிலும் ஆவேசத்திலும் ஆண்டவரின் வார்த்தையை ஆற்றலுடன் உரைத்த விதத்திலும் அவரைப் பற்றி அறிய மக்கள் ஆவல் கொண்டனர். எனவே, அற்புதங்கள் பற்றி எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும். அற்புதங்களின் ஏஜென்சியை இறைவன் எவருக்கும் வழங்கவில்லை. ஆகவே அற்புதங்களை நாடி ஓடுவதை விட ஆண்டவரின் வார்த்தையைத் தேடி அதன்படி செயல்படுவதே நற்செய்தி பணியாளர்களின் நோக்கமாக இருக்கவேண்டும்.

இயேசு கிறிஸ்து செய்த எல்லா அற்புதங்களையும் திருவிவிலிய எழுத்தாளர்களால் எழுதியிருக்க முடியாது. திருவிவிலியத்தில் எழுதப்படாத எண்ணற்ற பல அரும் அடையாளங்களையும் அற்புதங்களையும் இயேசு தம் சீடர்கள் முன்னிலையில் செய்தார் (யோவா 20:30). ஆனாலும் உலகில் இருந்த அனைத்து நோய்களையும் குணமாக்கவில்லை. அந்த நாட்களில் இறந்த அனைவரையும் உயிருடன் எழுப்பிக் கொண்டிருக்கவுமில்லை. ஏனென்றால், இயேசுகிறிஸ்து அற்புதங்கள் செய்வதற்காக மட்டும் இப்பூமியில் அவதரிக்கவில்லை. அது அவரது நோக்கமும் அல்ல. அவர் அதிசயமானவர். ஆகையால் அற்புதங்கள் இயல்பாகவே நிகழ்ந்தன. அவர் செய்த அற்புதங்கள் எல்லாம் அவரால் வரப்போகும் மாபெரும் மீட்பின் மகிழ்ச்சியையும் அவருக்குள் இருந்த வல்லமையையும் இறைமாட்சியையும் வெளிப்படுத்துவதாக இருந்தன. அவர் இப்போதும் அற்புதங்கள் செய்து கொண்டுதான் இருக்கிறார். அவருக்கு அது லேசான காரியம். அவரால் இயலாதது ஒன்றுமில்லை. அவரை நம்பினால் அவரைப்போல நாமும் செயல்பட முடியும். மேலும், இயேசு கிறிஸ்துவின் அற்புதங்களில் பலரும் கவனிக்காத மாபெரும் அற்புதங்கள் சில உண்டு. அவற்றை நாம் எப்பொழுதும் மறந்துவிடக்கூடாது.

**1. பிறப்பு:**

இயேசு கிறிஸ்து பிறப்பிக்கப்படாத சர்வ வல்லமையுள்ள இறைவன். அவர் படைக்கப்பட்டவரல்ல. அவரே படைத்தவர். கடவுளுக்கு இணையானவர். கடவுளின் வாக்கு. உலகமே கொள்ளமுடியாத ஒப்பற்ற இறைவன் ஒரு பெண்ணின் வித்தாகி, பெண்ணின் கருப்பைக்குள் சிசுவாகி ஒரு மனிதனாகப் பிறந்தது ஓர் மாபெரும் அற்புதமல்லவா? விண்ணுலகைப் படைத்து விரித்து, மண்ணுலகைப் பரப்பி, உயிரினங்களைத் தோன்றச் செய்து, அதற்கு உயிர் மூச்சு தந்து அதில் நடமாடுவோருக்கு ஆவியை அளித்த இறைவன் தொழுவத்தில் பிறந்து, கந்தையை உடுத்தி, கால்நடைகள் நடமாடுமிடத்தில் தவழ்ந்தது அற்புதமல்லவா? வாக்கு கடவுளாய் இருந்தது என்பதை யூதர்கள் பொய்மூட்டை என்றனர். வாக்கு மனிதரானார் என்பதை கிரேக்கர் பைத்தியகாரத்தனம் என்றனர். யோவானோ அதனை இறைஞானம் என்கிறார். ஞானமும் அறிவுமாகிய அற்புதத்தை கொலை செய்ய கொடிய வாள் துரத்தியதே. அது அற்புதமல்லவா? படைத்தவர் பிறந்தார் என்பது மாபெரும் அற்புதமே!

**2. பாடுகள்:**

மனிதர்கள் கண்டு, நம்பிக்கை கொண்டு மீட்படைய தம் ஒரே மகனை கடவுள் வெளிப்படுத்தினார். அற்புதமாய் வெளிப்பட்ட கடவுள் ஒரு கயவனைப் போல கைதியானது அற்புதமல்லவா?. அவர் வன்செயல் எதுவும் செய்ததில்லை. வஞ்சனை எதுவும் அவர் வாயில் வந்ததில்லை. ஆனால், அவர் இகழப்பட்டு, மனிதரால் புறக்கணிக்கப்பட்டு இழிவு படுத்தப்பட்டார். ஆனாலும் அவர் தம் வாயைத் திறக்கவில்லை. பாவமே அறியாத தூயவரை சாவுக்கு தீர்ப்பிட்ட போதும் மௌனம் காத்தார். மறுப்பேதும் கூறவில்லை. அவர் கசையால் அடித்து ஒடுக்கப்பட்டார். காறி உமிழ்ந்து சிறுமைப்படுத்தப்பட்டார். அடிப்பதற்கு இழுத்துச் செல்லப்பட்ட ஆட்டுக்குட்டிப்போலும் உரோமம் கத்தரிப்போர் முன்னிலையில் கத்தாத செம்மறி போலும் அவர் காணப்பட்டார். அவர் நினைத்திருந்தால் தனக்கு எதிராக செயல்பட்ட அத்தனை உரோமைப் படை வீரர்களையும் எறும்பை நசுக்குவதுபோல் நசுக்கி அழித்திருக்க முடியும். ஆனால், பாடுகள்தான் பாவமனிதன் மீட்புக்கு வழி என்பதால் படைத்தவர் தன்னை முழுவதும் பாடுபட ஒப்புக் கொடுத்தது மாபெரும் அற்புதமே!.

**3. மரணம்:**

சாவை அறியாதவர் இறந்தார் என்பது எப்போது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. ஏனென்றால், அவரே தொடக்கமும் முடிவுமானவர். பாவமில்லா தூயவர் (2 கொரி 5:21). மனிதம் இழந்த மகிமையை மீண்டும் பெற்றுத்தர மனிதகுலத்துக்காக தம்மையே சாவுக்கு கையளித்து 'தந்தையே! உம் கையில் என் உயிரை ஒப்புக் கொடுக்கிறேன்'. என்று கூறி கதறி துடித்து உயிர் துறந்தது அற்புதங்களின் அற்புதமல்லவா?. உயிரைக் கொடுத்தவரின் உயிரை எவரும் எடுக்கு முடியுமா! இயேசுகிறிஸ்துவின் அளவற்ற அன்பின் வெளிபாடான இறப்பின் முழு உண்மையை யார்தான் புரிந்து கொள்ள முடியும்! ஆகவே பாவிகளின் மீட்புக்கு பாவமில்லாத தூயவர் பலியாக வேண்டுமென்பதே தந்தையின் திருவுளம். ஆகவே சாவை அறியாதவர் இறந்தார் என்பது மாபெரும் அற்புதமே!

**4. உயிர்ப்பு:**

சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே? என்று சாவுக்கு சாவு மணி அடித்து சாவை வென்றது அற்புதமல்லவா? அற்புதத்தின் விளக்கமே, இதுவரை நடக்காத இனிமேலும் நடக்க முடியாத ஒன்று நடப்பதுதானே! இதுவரை எவரும் செய்யாததும் இனிமேலும் எவரும் செய்ய முடியாததுமான இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு மாபெரும் அற்புதமே! எந்நாளும் உங்களோடு இருக்கிறேன் என்றவர் இறந்து மூன்றாம் நாள் உயிர்த்தது அற்புதமல்லவா?

**5. மீட்பு:**

நாம் விட்டாலும் நம்மை விடாத பாவங்கள் கழுவப்பட்டது அற்புதமல்லவா? பாவிகளான நாம் தூயவர்கள் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டது அற்புதமல்லவா? நரகத்தின் வாசலில் கிடந்த நம்மை விண்ணக அரியணையில் அமர வைக்க பரலோக வாசலை திறந்தது அற்புதமல்லவா? நம்பிக்கையற்று கிடந்த நாம் இறை நம்பிக்கை பெற்றது அற்புதமல்லவா? நமக்காக எல்லாம் நிறைவேற்றிய அற்புத நாயகரை நம் கண்கள் காண்பதை தவிர இனி நமக்கு என்ன அற்புதம் வேண்டும். இயேசு கிறிஸ்துவே நமக்கு அற்புதம். அவரே நமக்கு வெற்றி.

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

அன்பால் அல்லது இரக்கத்தால் படைக்கப்பட்டதே ஒவ்வொரு ஆன்மாவும். ஆன்மா தொடர்ந்து நிலைபெற இறையன்பு அல்லது இரக்கம் இன்றியமையாதது ஆகையால் இறைவன் மனிதனின் ஆன்மாவில் இடைவிடாமல் அன்பை பொழிகிறார்.

பாவம் செய்யும் ஆன்மாவை இறைவன் விலக்கி விடுவதில்லை. கைவிடுவதும் இல்லை. மாறாக மன மாற்றத்திற்காகத் திரும்பி வருவதற்காக இதய வாயிலில் தட்டிக் கொண்டே இருக்கிறார். "இதோ நான் கதவு அருகில் நின்று தட்டிக் கொண்டிருக்கிறேன். யாராவது எனது குரலைக் கேட்டுத் திறந்தால் நான் உள்ளே சென்று அவர்களோடு உணவு அருந்துவேன். அவர்களும் என்னோடு உணவு அருந்துவார்கள் (திவெ 3:20).

பாவியின் இதய வாசலை இறைவன் இடைவிடாமல் தட்டி அழைப்பது அருள் வரங்கள் வழங்குவதற்கே. இவ்வருளை இறைவன் அனைவருக்கும் ஒரே மாதிரியாக தான் அளிக்கிறார். விண்ணகத் தந்தை நல்லோர் மேலும் தீயோர் மேலும் தன் கதிரவனை உதித்தெழச் செய்கிறார். நேர்மையுள்ளோர் மேலும் மழைப் பெய்யச் செய்கிறார்.

பாவி தனது பாவத்தால் இறைவனை ஆன்மாவில் இருந்து விலக்குகிறார். ஆகையால் இறைவன் அவனிடம் வாசம் செய்யவில்லை. பாவமில்லாத. பாவத்தை உணர்ந்த நம்பிக்கையாளரோடு வாசம் செய்து அவரை தனது முழுமையை நோக்கி வழி நடத்துகிறார். சுருங்கக் கூறின் பவிக்கு மீட்பளிப்பதற்கெனவே இறைவன் அவரது ஆன்மாவில் வாழ்கிறார்.

**இறைத் தேடல்**

இறைத் தேடல் என்பது இறைவன் இருக்கிறாரா? இல்லையா என்பதல்ல? மாறாக நாம் நம்புகின்ற இறைவன் நம்மைக் குறித்து வைத்துள்ள திட்டம் எது? என்று தேடி அறிவதே ஆகும்.. ஆண்டவர் விண்ணகத்தினின்று மானிடரை உற்று நோக்குகின்றார். மதிநுட்பமுள்ளோர் கடவுளை நாடுவோர் எவராவது உண்டோ எனப் பார்க்கின்றார் (திபா 14:2).

நம்மைப் பற்றிய இறைவனின் திட்டம் நமது மீட்பிற்கு தேவையானதாகும். உங்களுக்காக நான் வகுத்திருக்கும் திட்டங்கள் எனக்குத் தெரியும் அன்றோ. அவை வளமான எதிர்காலத்தையும் நம்பிக்கையையும் உங்களுக்கு அளிப்பதற்கான நல்வாழ்வின் திட்டங்களே அன்றி கேடு விளைவிப்பதற்கான திட்டங்கள் அல்ல (எரே 29:11).

**வெறுமையாக்குதல்**

நமது திட்டங்களை புறந்தள்ளி இறைவனின் செயல்பாட்டுக்கும் அவரது திட்டத்திற்கும் முதலிடம் தருதலே வேறுமையாக்குதல் ஆகும். தனது திட்டப்படியே அனைத்தும் நடக்க வேண்டும் என்ற எண்ணம் இறைவனைத் தேடுபவருக்கு எற்றதன்று. நமக்கான திட்டத்தை விட்டு விட வேண்டும். சக்கேயு மரத்தின் மீது ஏறியதற்கு இயேசுவைக் காண வேண்டும் என்ற குறிக்கோள் மட்டும் இருந்தது (லூக் 19:3-4) இயேசு அவரைக் காண வேண்டுமென்றோ? அவரது வீட்டிற்கு செல்ல வேண்டுமென்றோ? அவரைப் புதிய படைப்பாக்க வேண்டுமென்றோ? நினைக்கவில்லை.

இயேசு அவரிடம் சக்கேயு விரைவாய் இறங்கி வாரும். இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும் (லூக் 19:5) என்றார். சக்கேயு மரத்தின் மேலே இருந்து இறைவனைக் கீழே நோக்க வேண்டும். கீழே இறங்கி வந்து மேலேயிருக்கும் இறைவனைப் பார்க்க வேண்டும். மரத்தின் மேல் அவரது நிலை அவரது பாவ வாழ்க்கையையும் முறையற்ற செல்வச் செருக்கையும் வெளிப்படுத்தின. அங்கிருந்து அவருக்கு இறைவனைக் காண இயலாது அன்றியும் கீழ் நோக்கியுள்ள அவரது பார்வை தீமையை நோக்கியே செல்லக் கூடும் எனவே இயேசு அவரிடம் விரைவாக இறங்கி வாரும் என்றார். அவரின் இறங்கி வந்த செயல் அவரை உயர்வினை நோக்கி அழைத்துச் சென்று விண்ணக அனுபவத்தை நோக்கி உந்தித் தள்ளியது. அவரும் அவரது குடும்பமும் மீட்படைந்தது.

இறைவனின் அழைப்பிற்கு பதிலளித்து தற்போதைய பாவ நிலையிலிருந்து புனித நிலையை நோக்கி சக்கேயு மாறிய வேளையில் அவர் தன்னைத்தானே வெறுமையாக்கினார்.

இறையருள் கிடைக்க விரும்பும் பாவிகள் முதல் முதலில் தன்னைத்தானே வெறுமையாக்க வேண்டும். அல்லது தனக்குரிய திட்டத்தை கைவிட வேணடும். அப்போதுதான் கடவுளின் திட்டம் நம்மில் செயல்படத் துவங்கும்.

நற்பணி V.**செபஸ்டியன் தார்சிஸ்,** செஞ்சை.

## இது சாத்தியமா ?

அந்த 12 வயதுச் சிறுமியின் பெயர் பிருந்தா. கல்விச் சுற்றுலா முடிந்து திரும்பிக் கொண்டிருந்தபோது. தான் வீட்டிற்கு வாங்கி வந்த பொருட்களை மடியில் அடுக்கி வைத்து அழகு பார்த்துக் கொண்டிருந்தாள். "இது - பிள்ளையார் படம், அப்பாவுக்கு இது - வளையல். அம்மாவுக்கு இது. கைக்காப்பு அண்ணனுக்கு." நான் இடைமறித்தேன். "சென்ற வாரம் உன் அண்ணன் கல்விச் சுற்றுலா சென்றிருந்தானே. உனக்கு என்ன வாங்கி வந்தான்?" "எனக்கு ஒன்றுமே வாங்கலை சார்" என்று பிருந்தா சொன்னபோது ஏக்கத்தொனி அவளது குரலில் ஒலித்தது. நான் விடவில்லை அத்தோடு. "பின், நீ மட்டும் ஏன் அவனுக்கு வாங்கி வந்தாய்?" என்று நான் கேட்க, தாமதிக்காமல் பதில் சொன்னாள் பிருந்தா. "அவன் எப்படியோ இருந்திட்டு போறான் சார். நானும் அவன் மாதிரியே இருக்கணுமா?" யாருக்காகவும் நமது நல்ல இயல்புகளை மாற்றிக் கொள்ளத் தேவையில்லை என்ற உயரிய கருத்தை உள் வாங்கியிருந்தாள் பிருந்தா.

இதே சூழலுக்கேற்ற கதை ஒன்று என் ஞாபகத்திற்கு வருகிறது. உங்கள் ஞாபகத்திலும் வரும் என்றே நம்புகிறேன்.

ஞானியும், சீடனும் ஒரு பாதை வழியாகப் போய்க் கொண்டிருந்தார்கள். செல்லும் வழியில், நீர் நிரம்பிய குட்டையில் தேள் ஒன்று தத்தளித்துக் கொண்டிருந்தது. இரக்கப் பார்வையோடு அந்தத் தேளை காப்பாற்ற எண்ணிய ஞானி அதைக் கையிலெடுத்து தரையில் விட்டார். கையிலெடுத்த சமயத்தில் தேள் ஞானியின் கட்டை விரலைப் பதம் பார்த்தது. ஆனால் தரையில் விடப்பட்ட தேள் மீண்டும் தண்ணீருக்குள் விழுந்து தத்தளித்துக் கொண்டிருந்தது. இதைப் பார்த்த ஞானி மீண்டும் தேளைக் கையிலெடுத்து தரையில் விட முயற்சிக்க, மறுபடியும் தேள் ஞானியின் கை விரல்களில் கொட்டியது. அதுவரை பொறுமையாய் இருந்த சீடன்

கேட்டான். "முதன்முறை தேனை நீங்கள் காப்பாற்ற எண்ணியபோதே கொட்டியதல்லவா? பின்னர் மீண்டும் அதைக் காப்பாற்ற ஏன் முயல வேண்டும்?"
ஞானி நிதானமாய்ப் புன்முறுவலோடு சொன்னார் "கொட்டுவது தேனின் இயல்பு. மனிதனின் இயல்பு இரக்கப்படுவதல்லவா? யாருக்காகவும், எதற்காகவும் நாம் ஏன் நம் நல்ல இயல்புகளை மாற்றிக்கொள்ள வேண்டும்?"
ஒளியின் ஆட்சிக்குரிய படைக்கலன்களை அணிந்து (உரோ 13:12) தீமைக்குப் பதில் தீமை செய்யாமல் (உரோ 12:17) வாழ்வது சாத்தியம்தானே.

நற்பணி **அருள் இளங்கோ,** இராம்நகர்

## மே 2025 இனம் காணப்பட்ட புதிய பணியாளர்கள் பயிற்சி

| நாள் | மையம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 24.05.25 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி G.M.S. ராணி<br>நற்பணி X. லூர்து மேரி<br>நற்பணி J. ரபேக்கா |
| 25.05.25 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>நற்பணி A. ஆடைக்கலம் செயலர் |
| 25.05.25 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி S. சேசுராஜா<br>நற்பணி V. செங்கோல்மேரி<br>நற்பணி P. சகாயராணி |
| 25.05.25 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி S. ஆரோக்கியசாமி<br>நற்பணி A. ஞானசெல்வி |
| 25.05.25 | வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி L. ஜோசப் இருதயம்<br>நற்பணி A. பிரான்சிஸ் சேவியர்<br>நற்பணி G. மைக்கேல் பிரபாகர் |
| 25.05.25 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி J. ஆரோக்கியசாமி<br>நற்பணி S. அந்தோணிபிரகாஷ்<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 25.05.25 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | Sr. பச்சைஜோதி<br>நற்பணி A. சகாயராஜா<br>நற்பணி இ. மாணிக்க மலர் |
| 25.05.25 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி M. அருள்மரியநாயகம்<br>நற்பணி T. ஸ்டீபன் |
| 25.05.25 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி S. இராஜேந்திரன்<br>நற்பணி M. விசுவாசம்<br>நற்பணி A. ஜான்சிமேரி |
| 25.05.25 | புனித பேதுரு கோவில் சி.கே. மங்கலம் | நற்பணி A. சத்தியேந்திரன்<br>நற்பணி M. டேவிட்<br>நற்பணி A. சகாயதமிழ்ச்செல்வி |

# எதிர்நோக்கின் விண்ணகப் பயணம்

(யூபிலி ஆண்டின் தயாரிப்பாக)



'விண்ணகத்திலிருந்து ஒரு குரலைக் கேட்டேன் 'இதுமுதல் ஆண்டவரோடு இணைந்த நிலையில் இறப்போர் பேறு பெற்றோர்' என எழுது. ஆம் அவர்கள் தங்கள் உழைப்பிலிருந்து ஓய்வு பெறுவார்கள். ஏனெனில் அவர்களின் செயல்கள் அவர்களைப் பின்தொடரும்' (திவெ 14:13) நமது அன்பு திருத்தந்தையின் மறைவு திரு அவையினர் பலரின் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி சோகத்தில் ஆழத்தியுள்ளது. அவரின் எளிய உள்ளமும், தாழ்ச்சி நிறைந்த மென்மையான பண்பு நலன்களும், விளிம்புநிலை மக்களோடு அவர் கொண்டிருந்த அன்பும், அவர்களை ஆரத்தழுவி கைதூக்கி விட்டு அவர்களின் வாழ்வை மேம்படுத்திப் பார்த்த இரக்கத்தையும் நினைக்க நினைக்க நம் விழிகளில் கண்ணீர் துளிர்க்கிறது.

அதே நேரத்தில் எவ்வளவு பணக்கார நாடாக இருந்தாலும் தப்பை தட்டிக்கேட்ட அவரின் நேர்மையான கோபம், போர்களுக்கு எதிராக குரல் கொடுத்துக் கொண்டே இருந்த வல்லமையையும் ஆற்றலையும் நினைத்துப் பார்க்கும் போது இவர் தான் தலைவர் என்று பெருமிதப்பட வைக்கிறது.

இயற்கையை தூய அசிசியாரைப் போலஅவர் நேசித்த விதம் இளையோர் மீது அவர் கொண்டிருந்த நேசம் என்று சொல்லிக் கொண்டே போகலாம்.

ஒரு மனிதர் இறுதி வரை தான் ஏற்றுக் கொண்ட பணியை நிறைவாக செய்ய முடியுமா என்று கேட்கும் அளவுக்கு இறப்பிற்கு முதல்நாள் வரை சக்கர நாற்காலியிலிருந்து கொண்டு மக்களை ஆசீர்வதித்தவர், தொழுநோயாளிகளை போய் சந்திக்க வேண்டும் என்ற தம் விருப்பத்தைத் தெரிவித்தவர் நம் அன்புக்குரிய திருத்தந்தை அவர்கள். தான் இறந்தாலும் எந்த ஆடம்பரமுமின்றி சாதாரண சவப்பெட்டியில் தன் உடல் வைக்கப்பட வேண்டும் என்பதனை முதலிலேயே தெரிவித்து இருந்தார். திருத்தந்தைக்குரிய சிறப்பு அடையாளங்ளைகளை உயர்த்திப் பிடிக்காமல் எளிய முறையில் தனது அடக்கம் நிறைவேற்றப்பட வேண்டும், மற்ற திருத்தந்தையரை அடக்கம் செய்த பேதுரு பசிலிக்காவில் அல்ல தம்மை சாண்டா மார்த்தா பசிலிக்காவில் அன்னைமரியாவின் பாதத்தில் அடக்கம் செய்ய வேண்டும் என்ற அவரின் எளிய தாழ்ச்சி மிகுந்த நம் திருத்தந்தை அவர்களின் விருப்பம் உலகத்தைத்தையே திரும்பி பார்க்க வைத்தது. புகழுக்காக எதையும் செய்யும் இவ்வுலகில் இப்படி ஒரு தூய ஆன்மா... இவ்வுலகு சார்ந்ததை அவர்

நாடவில்லை மேலுலகு சார்ந்தவற்றை மட்டுமே அவர் நாடினார் எதிர்நோக்கினார் என்பது நாம் அவரிடமிருந்து கற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கிறது. ஆண்டவர் உறுதியாக தம் விண்ணக வீட்டிற்கு அழைத்துச் சென்றிருப்பார் என்பதில் துளியும் சந்தேகமில்லை.

**வானகத்தை இவ்வகையகத்தில் ... :**

'என் மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைபிடிப்பார். என் தந்தையும் அவர் மீது அன்பு கொள்வார். நாங்கள் அவரிடம் வந்து. அவருடன் குடிகொள்வோம்' (யோவா 14:22) என்கிறது இயேசுவின் வார்த்தை. இறை இயல்பில் அன்பு வழி வாழ்வை அனைவருடனும் பரிவோடும் பகிர்தலோடும். நெகிழ்வுடன் கூடிய தோழமையோடும் இவ்வுலகில் வாழ்ந்தோமென்றால் இவ்வுலகிலேயே வானக முன் சுவையை பெற்றுக் கொள்ள முடியும். அதி உன்னத இறைஇணைப்பில் இணைந்திருக்கும் போது வாழ்வின் சவால்கள் , மேடு பள்ளங்கள். புயல் வெள்ளங்கள் சூறாவளிகள் என்று எல்லாவற்றையும் அவரின் விரல் பற்றி கடந்து சென்று விடலாம். எதுவும் நம்மை ஒன்றும் செய்ய முடியாது. கனி வாழ்வு வாழ்ந்து அவரின் கரத்தை இறுகப் பற்றிக் கொண்டு இறை நம்பிக்கையோடு ஆண்டவரில் நம்மைக் காணும் போது 'அவரது மகிழ்ச்சி நம்முள் இருக்கும். நம் மகிழ்ச்சி நிறைவு பெறும் ' (யோவா. 15.11) என்பது நிச்சயமே.

'இதோ இங்கே! அதோ அங்கே ! எனச் சொல்ல முடியாது ஏனெனில் இறையாட்சி (நம்) உங்கள் நடுவேயே செயல்படுகிறது (லூக் 17:20). இயேசு என்ற மையத்துக்குள் இவ்வுலகிலுள்ள எல்லாவற்றையும் விட அவர் மட்டுமே போதும் என்று வாழ்பவர்கள். இறைவார்த்தைகளின் மதிப்பீடுகளில் தங்கள் வாழ்வை மேம்படுத்திக் கொண்டவர்கள். கிறிஸ்துவ விழுமியங்களின் ஒப்புயர்வற்ற தன்மைகளில் பணிபுரிபவர்கள். கடவுளைத் தவிர எனக்குப் பெரிதில்லை என்று வாழ்பவர்கள் (மத்13:44-46) நடுவில் இறையாட்சி குடிகொண்டிருக்கும் என்பது உறுதியே. அனைத்தையும் விட்டுவிட்டு இயேசுவைப் பின்பற்றும் சீடர்கள் இம்மையில் பன்மடங்கும் மறுமையில் நிலைவாழ்வும் பெறாமல் போகார் (லூக் 18:30) என்று உறுதியளிக்கிறார் நம் தெய்வம்.

**விண்ணக எதிர்நோக்கு:**

இயேசு உலக மக்களின் மீட்புக்காக துன்புறும் ஊழியராக தம் உயிரையே கையளித்து தம் தந்தையின் திருவுளத்தை முழுமையாய் நிறைவேற்றினார். உயிர்த்த பின்னும் வலுவற்ற நிலையிலிருந்த தம் சீடர்களுக்கு மனவுறுதியை அளித்து ஆற்றல்ப்படுத்தினர். அவர்களின் பணிவாழ்வு எப்படி இருக்க வேண்டும் என்ற புரிதல்களை கொடுத்து தெளிவுபடுத்தினார். தமது உடனிருப்பை உறுதிபடுத்தினார். ஆசிவழங்கினார் (லூக் 24:40-52)அதன் பின் அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே விண்ணகம் ஏறிச் சென்றார்.

இயேசுவின் விண்ணேற்றத் திருப்பலியில் செபிக்கப்படுகின்ற சபை மன்றாட்டில்' எல்லாம் வல்ல இறைவா! உம் திருமகன் கிறிஸ்துவின் விண்ணேற்றம் எங்களுக்கு ஒரு முன் அடையாளமாக இருக்கின்றது.

தலையாகிய அவர் பெற்ற மாட்சிக்கு உடலாகிய நாங்களும் அழைக்கப்பட்டிருக்கிறோம் என்ற எதிர்நோக்கை எங்களுக்குத் தருகின்றது. எனவே நாங்கள் உமக்கு அன்புடன் நன்றி கூறி புனிதமான மகிழ்ச்சியுடன் அக்களிக்க செய்வீராக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக மன்றாடுகிறோம்' என்ற இந்த செபம் விண்ணக எதிர்நோக்கிற்கு அழைப்பு விடுப்பதாக இருக்கிறது.

சீடர்கள் மூலம் நமது கடமை என்ன? என்பதையும் உரிமை என்னவென்பதையும் விளக்கி இருக்கிறார் நம் இயேசு ஆண்டவர். பணியிலும் வாழ்விலும் 'நாம் அடையும் இன்னல்கள் மிக எளிதில் தாங்கக் கூடியவை... அவை ஈடு இணையற்ற மாட்சியை விளைவிக்கவே.... நாம் .காண்பவற்றை அல்ல காணாதவற்றையே எதிர்நோக்கி வாழ்கிறோம் (2 கொரி. 4: 17, 18) காணாதவை என்றென்றும் நிலைத்திருப்பவை. அதுதான் விண்ணக நிலைவாழ்வு. நிறை மகிழ்வு. எனவே கிறிஸ்துவிடம் காணப்பட்ட நிறைவைப் பெறுமளவுக்கு நாம் முதிர்ச்சியடைவோம். கடவுளிடம் அடைக்கலம் தேடும் நாம் நம் கண்முன் எதிர்நோக்கியுள்ளதை விடாமல் பற்றிக் கொள்வதற்குத் தளரா ஊக்கம் கொண்டிருக்க வேண்டும். இந்த எதிர்நோக்கே நம் உள்ளத்திற்குப் பாதுகாப்பான உறுதியான நங்கூரம் (எபி 7:1819) நிலைவாழ்வில் நம்பிக்கை வைத்து மண்ணக வாழ்வில் உயிரோட்டமுள்ள சாட்சியங்களாய் தொடர்ந்து பயணிப்போம்.

நமது அருமையான திருத்தந்தை அவர்கள் யூபிலி ஆண்டைத் துவங்கி வைத்து அதனை அர்த்தமுள்ள வகையில் கொண்டாட திரு அவைக்கு அழைப்பு விடுத்தார். அவர் இன்று நம்மிடையே இல்லை. ஆயினும் 'எதிர் நோக்கின் பயணிகளாக' நாம் யூபிலி ஆண்டின் இரக்கச் செயல்களை தொடர்ந்து செய்து வரும் போது இறைத்தந்தையின் ஆசியும் திருத்தந்தையின் பரிந்துரையும் நம்பயணத்தில் துணைநிற்கும். 'நம் இதயக் கதவுகளை இறைவனுக்கு திறநது. அவரால் நாம் வழிநடத்தப்பட அனுமதிப்போம்' என்கிற நம் திருதந்தையின் வார்த்தையை மனதில் இருத்தி பயணிப்போம்

நற்பணி **ஜெஸி. P.**

## ஒரு பணியளாரின் மன்றாட்டு



எங்கள் பாவங்களுக்காக ஒரே ஒரு முறை உம்மையே பலியாக(எபி 10:12) செலுத்திய ஆண்டவரே!

உமது உயிர்த்தெழுதல் வழியாக எங்களுக்கு மீட்பைத் தரவும். (1 பேது 3:21) நம்பிக்கை கொண்டு உம்மை எதிர்நோக்கியும் இருக்கவே கடவுள் இவ்வாறு செய்தார் (1 பேதுரு 1:21)என்பதை உணர்ந்து. தீய நாட்டங்களால் ஏமாந்து அழிவுறும் பழைய மனிதருக்குரிய இயல்பைக் களைந்து விட்டு (எபே 4:22) உம் உயிர்த்த ஆற்றலால் என்னுள் உயிரோடு இருக்கும் பாவ இயல்பைச் சாகடித்து உம்மில் என்றும் உயிர்ப்புடன் வாழ வரமருள மன்றாடுகிறேன்.

## மே 2025 நற்செய்திப் பணிக்குழு பணித்திட்டம்

| நாள் | நிகழ்வு | இடம் |
| --- | --- | --- |
| 04. | புதிய பணியாளர்கள் பயிற்சி | அருள்சான்று நிலையம். பரமக்குடி<br>காளையார்கோவில் |
| 07. | அருளமுது ஆதாரக்குழு கூடுகை | அமைதியகம். காயாவயல்.<br>அருள்சான்று நிலையம். பரமக்குடி |
| 07. | நற்பணி சந்திரபுஷ்பா திருமணம் | சாயல்குடி |
| 10. | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித குழந்தை தெரசாள் கோவில் தங்கச்சிமடம் |
| 10. | புதிய பணியாளர்கள் அறிமுகப் பயிற்சி | தஞ்சாவூர். |
| 11. | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித செபமாலை அன்னை கோவில். இராமநாதபுரம்.<br>வியான்னி அருள்பணி மையம். சிவகங்கை.<br>புனித அருளானந்தர் திருத்தலம். ஓரியூர். |
| 12. | நற்பணி அருள்சீலா மேரி இல்லத் திருமணம் | சுப்பராயபுரம். பரமக்குடி |
| 16 & 17 | பாடகற்குழுப் பயிற்சி | அருள்சான்று நிலையம். பரமக்குடி |
| 16 | பணியாளர்கள் கூடுகை திட்டமிடல் | அருள்சான்று நிலையம். பரமக்குடி |
| 18 | புதிய பணியாளர்கள் பயிற்சி | அமல அன்னை அமைதியகம். காயாவயல்<br>புனித ஆரோக்கிய அன்னை கோவில். சாயல்குடி |
| 24 | புதிய பணியாளர்கள் அறிமுகப் பயிற்சி | புனித குழந்தை தெரசாள் கோவில் தங்கச்சிமடம் |
| 25. | புதிய பணியாளர்கள் பயிற்சி | தூய ஆவியார் கோவில். இராஜசிங்கமங்கலம்<br>புனித அடைக்கல மாதா கோவில். திருமயம் |
| 25 | இனம் காணப்பட்ட பணியாளார்கள் பயிற்சி | பரமக்குடி. காளையார்கோவில். சிவகங்கை<br>சாயல்குடி. அமைதியகம். சி.கே. மங்கலம். |
| | | ஆர்.எஸ் மங்கலம். இராமநாதபுரம்.<br>ஓரியூர் மையங்கள் |
| 30. | நற்பணி R. ஆரோக்கியசாமி இல்ல முதல் இறைஉணவு விழா | வல்லணி. சிவகங்கை |
| 31. | விரிவாக்க உள்ளுயிர்குழுக் கூட்டம் | அருள்சான்று நிலையம். பரமக்குடி |

**வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும்**

அவரை எதிர்நோக்கி இருக்கிற அனைவரும் அவர் தூயவராய் இருப்பதுபோல் தம்மையே தூயவராக்க வேண்டும்.

**1 யோவான் 3:3**

| நாள் | மையயம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 04.05.25 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி A. சத்தியேந்திரன்<br>நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>நற்பணி A. யூஜின் அமல்ராஜ் |
| 04.05.25 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி G.M.S. ராணி<br>நற்பணி J. அருள் இளங்கோ<br>நற்பணி V. செங்கோல்மேரி |
| 10.05.25 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி J. மரிய புஷ்பம்<br>நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி X. லூர்து மேரி |
| 11.05.25 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி G.M.S. ராணி<br>நற்பணி A. பிரான்சிஸ் சேவியர் |
| 11.05.25 | வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி M. சகாயமேரி<br>நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>நற்பணி M. லூயிஸ்ஜான்போஸ்கே |
| 11.05.25 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி J. அருள் இளங்கோ<br>நற்பணி S. பால்ராஜ்<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 18.05.25 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | Sr. பச்சைஜோதி<br>நற்பணி L. ஆரோக்கியசாமி<br>நற்பணி P. அமலோற்பவஆரோக்கியராணி |
| 18.05.25 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி M. மரியகிரகோரி<br>நற்பணி M. அருள்மரியநாயகம்<br>நற்பணி T. ஸ்டீபன் |
| 25.05.25 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி A.ஆரோக்கியமேரி<br>நற்பணி S. தைனஸ்மேரி |
| 25.05.25 | அடைக்கலமாதா கோவில் திருமயம் | நற்பணி S. சகாயராணி<br>நற்பணி S. பால்ராஜ் |

இப்ப இல்லாட்டி எப்ப ?
-எல்லாரோ

உண்மையை ஒளித்து வைக்க முடியும்.
புதைத்து விட முடியாது.
**இதுதானே உயிர்ப்பு தரும் செய்தி.**

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

ஒருவர் உரைக்கும் உண்மை என்றும் நிலைக்கும்; பொய்யுரையின் வாழ்வோ இமைப்பொழுதே. (நீதிமொழிகள் 12:19)

# திறமை

"நாங்களே செய்ததாக எதன் மேலும் உரிமை பாராட்டிக் கொள்ள எங்களுக்குத் தகுதி இல்லை. எங்கள் தகுதி கடவுளிடமிருந்தே வருகிறது" (2 கொரி 3:5).

திறமை என்பது கடவுள் நமக்கு தந்த ஒரு கொடை. அவரவர் திறமைக்கு ஏற்ப ஒருவருக்கு ஐந்து தாலந்தும் வேறொருவருக்கு இரண்டு தாலந்தும் இன்னொருவருக்கு ஒரு தாலந்தும் கொடுக்கப்படுகிறது (மத் 25:15). கடவுள் பணியாளர் எவரையும் வெறும் கையராக விடுவதில்லை. அவர் அவர்களின் அழைத்தலுக்கேற்ப அவர் தாலந்துகளை கொடுக்கின்றார். அவற்றை வைத்து நாம் என்ன செய்கின்றோம். உவமையில் வரும் தலைவரைப் போலவே இயேசுவும் தம் பணியாளர்களிடம் பின்வரும் பொறுப்புகளை ஒப்படைத்துள்ளார்.

நற்செய்தியைப் பரப்புதல் (மத் 28:16-20), தவறு செய்தவர்களை மன்னித்தல். (மத் 6:14-15) மற்றவர்களை அன்பு செய்தல் (யோவா 13::34-35) மக்களைப் பராமரித்தல் (யோவா 21:17) உலகிற்கு எடுத்துக்காட்டாக வாழதல் (மத் 5:13) பசித்தவர்களுக்கு உணவளித்தல் (மத் 14:16). ஏழைகள், கைதிகள் மற்றும் நோயாளிகளை பராமரித்தல் (மத் 25:36). அந்நியர்களையும் வெளியாட்களையும் உபசரித்தல் (மத் 25:35). அவர் திரும்பி வந்து அவர் அவருக்கு கொடுத்த திறமையின்படி கணக்கு கேட்பார். என்னிடம் திறமையில்லை என்று யாரும் தப்பித்துக் கொள்ள முடியாது. பொது நன்மைக்காகவே தூய ஆவியாரின் செயல்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுகிறது (1 கொரி 12:4-7) தனிப்பட்ட நபரின், நன்மைக்காக அருள்கொடைகள் கொடுக்கப்படவில்லை. என்னிடம் திறமையில்லை எனக்குச் சரியாக பேசத் தெரியாது என்றாலும் மோசே கூறினாலும் கடவுள் அவரை. விடுதலை வீரனாக்கினார் (விப 4:10). எனக்குப் படிப்பறிவு இல்லை என்ற பேதுருவின் மீது தன் திரு அவையை கட்டுகிறார் (மத் 16:18). நான் படித்தவன் திறமைசாலி என்னிடம் திறமை அதிகம் இருக்கிறது என்று நினைத்த பவுலை முமையாய் பயன்படுத்துகிறார். அதுபோல நம்மையும் பயன்படுத்துவார். நமக்கு அளிக்கப்பட்டுள்ள அருளுக்கேற்ப வெவ்வேறு அருள்கொடைகளைப் பெற்றுள்ளோம். இறைவாக்குரைக்கும் கொடையை நாம் பெற்றிருந்தால் நாம் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு ஏற்றவாறு அதைப் பயன்படுத்த வேண்டும். தொண்டாற்றும் கொடையை நாம் பெற்றிருந்தால் அதைத் தொண்டு புரிவதற்குப் பயன்படுத்த வேண்டும். கற்றுக் கொடுப்பபோர் கற்றுக் கொடுப்பதிலும் ஊக்கமூட்டுவோர் ஊக்கம் தருவதிலும், தமக்குள்ளதை வழங்குவோர் தாராளமாய்க் கொடுப்பதிலும், தலைமை தாங்குவோர் முழு ஆர்வத்தோடு செயல்படுவதிலும் இரக்கச் செயல்களில் ஈடுபடுவோர் முகமலர்ச்சியோடு அவற்றைச் செய்வதிலும் தாம் பெற்ற அருள்கொடைகளைப் பயன்படுத்த வேண்டும் (உரோ 12:6-8). ஆனால் பலர் இதை புரிந்து கொள்வதில்லை. அரிவாள் கூர்மையானது. வலிமையானது தான் ஆனால் அதை வைத்து முடியை வெட்ட முடியாது. அவ்வாறு பிளேடு கூர்மையானனது. ஆனால் அதை வைத்து மரத்தை வெட்ட முடியாது. அதனால் அரிவாள் தான் சிறந்தது என்றோ.

பிளேடுதான் சிறந்தது என்றோ கூறமுடியாது. அதுபோல நாம் நமது திறமையை பயன்படுத்துவதில் கவனமாக இருத்தல் வேண்டும். ஏனென்றால் நாம் செய்யும் அனைத்து பணிகளும் இயேசுவுக்காக செய்கின்றோம்.

மதிகேடரைவிட ஞானமுள்ளவர் எவ்வகையில் மேலானவர்? அல்லது ஏழை ஒருவருக்கு மனிதர்முன் திறமையுடன் நடந்து கொள்ளத் தெரிந்திருந்தும். அதனால் அவருக்குப் பயனென்ன? (சஉ 6:8) சரியான ஒழுங்கான வாழ்க்கையின்றி பெரிய பேச்சாற்றல் இருந்து என்ன பலன்? நம்முடைய கொடைகள் நமக்குச் சொந்தமானவை அல்ல. நாம் பிறப்பதற்கு முன்பே அவர் வகுத்த திட்டங்களின்படி (எரே 1:5) அவரை என்றென்றும் மகிமைப்படுத்துவதற்காக. நாம் கடவுளால் பயத்துடனும் அற்புதத்துடனும் வழங்கப்பட்டவை. (திபா 139:13-14). பணத்தை வைத்திருந்த கூலியாளுக்கு அந்த பணம் எவ்வாறு உரிமை இல்லாமல் முதலாளிக்கு கணக்கு கொடுக்க வேண்டியது போல நாமும் அவரிடம் இருந்து பெற்ற நமது திறமைகளுக்கும் கணக்கு கொடுக்க வேண்டும். நாம் நமது கொடைகளால் கடவுளுக்குப் பணி செய்யும்போது வாழ்க்கையில் நமது உண்மையான மகிழ்ச்சியையும் இடத்தையும் காண்கிறோம். நமது திறமைகளால் கடவுள் மகிழட்டும். நாம் செருக்கடையாமல் பார்த்துக் கொள்வோம். ஏனென்றால் செருக்குற்றோரை அவர் இகழ்ச்சியுடன் நோக்குகிறார். தாழ்நிலையில் உள்ளவர்களுக்கோ கருணை காட்டுவார்" (யாக் 4:6)

நற்பணி **ஜஸ்டின்,** பாம்பன்

## புனித ரீட்டா



ரீட்டா 1381 ஆம் ஆண்டு இத்தாலியில் உள்ள ஸ்போலேடோ என்ற ஊரில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். இவருடைய பெற்றோருக்கு நீண்ட நாட்கள் குழந்தையே இல்லை. இடைவிடாத செபத்தினால்தான் இவர்கள் ரீட்டாவைப் பெற்றெடுத்தார்கள். இவருடைய தாய் இறைபக்தியில் சிறந்து விளங்கினார். அதனால் இவர் தன்னுடைய மகளான ரீட்டாவை இறைபக்தியில் சிறப்பாக வளர்த்தெடுத்தார். ரீட்டா சிறுவயது முதற்கொண்டே செபத்திலும் ஏழைகளுக்கு உதவும் நல்ல பண்பிலும் சிறந்து விளங்கினாள்.

இவருக்கு பதினெட்டு வயது நடந்துகொண்டிருந்தபோது இவர் புனித அகுஸ்தினாருடைய சபையில் துறவியாகச் சேரவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தார். ஆனால் இவருடைய பெற்றோர் வயதானவர்கள் என்பதாலும் இவர்களைப் பராமரிக்க ஆள் இல்லை என்பதாலும் இவர் பெற்றோருடைய

கட்டாயத்தில் பேரில் பெர்டினான்ட் என்ற மனிதனை மணந்துகொண்டார். அவர் சாதாரண மனிதனாக இல்லை. முரடனாகவும் ரீட்டாவை எப்போதும் அடித்துத் துன்புறுத்துபவனாகவும் இருந்தான். ரீட்டா மிகவும் பொறுமையாக தன்னுடைய கணவர் மனந்திரும்பும்படியாக இறைவனிடம் எப்போதும் வேண்டிக்கொண்டே இருந்தார். இந்த நேரத்தில் ரீட்டாவிற்கு ஜான். பால் என்ற இரண்டு குழந்தைகள் பிறந்தார்கள். குழந்தைகள் பிறந்த பின்பாவது தன்னுடைய கணவர் திருந்துவார் என்று அவர் எதிர்பார்த்தார். ஆனால் அவரோ ரீட்டாவை இன்னும் அதிகமாக துன்புறுத்திக்கொண்டே இருந்தார்.

நாட்கள் செல்ல செல்ல ரீட்டா தன்னுடைய கணவருக்காக தொடர்ந்து இறைவனிடம் வேண்டிக்கொண்டே இருந்தார். அவர் செய்த செபம் வீண்போகவில்லை. அவருடைய கணவர் மனம்மாறினார். புதிய வாழ்க்கை வாழத் தொடங்கினார். எல்லாம் நன்றாகப் போய்க்கொண்டிருந்த நேரத்தில் திடிரென்று ஒருநாள் அவருடைய கணவரை மர்ம நபர்கள் சிலர் கொன்றுபோட்டார்கள். அப்போது ரீட்டா அடைந்த துன்பத்திற்கு அளவே இல்லை. ஆனாலும் அவர் ஆண்டவர் இயேசு சிலுவையில் தொங்கியபோது தன்னுடைய பகைவர்களை மன்னித்ததுபோன்று தன்னுடைய கணவரைக் கொன்றவர்களை மன்னித்தார். அவர் மன்னித்தாலும் அவருடைய பிள்ளைகளான ஜானும் பாலும் தங்களுடைய தந்தையைக் கொன்றுபோட்ட கயவர்களைக் கொன்றுபோட துடித்துக்கொண்டிருந்தார்கள். இதை நினைத்து ரீட்டா பெரிதும் கவலைப்பட்டார். சிறிது நாட்களில் அவரது இரண்டு மகன்களும் இறந்தனர். கணவரையும் பிள்ளைகளையும் இழந்தபின் துறவுமடத்தில் சேர்ந்து செபத்திலும் கீழ்ப்படிதலிலும் நற்கருணை பக்தியிலும் சிறந்து விளங்கினார். குறிப்பாக இவர் இயேசுவின் பாடுபட்ட திருவுருவத்தைப் பார்த்து அதிகமாக தியானித்தார்.

அத்தகைய தருணத்தில்தான் 1441 ஆம் ஆண்டு இயேசுவின் தலையில் இருந்த முள்முடியில் இருந்த ஒரு முள்ளானது அவரது நெற்றியில் பதிந்து அவருக்கு மிகப்பெரிய வேதனையை ஏற்படுத்தியது. நெற்றியில் ஏற்பட்ட காயத்திலிருந்து வழிந்த இரத்தம் சில நேரம் துர்நாற்றத்தை ஏற்படுத்தியது. இதனால் துறவுமடத்தில் இருந்தவர்கள் அவரை அவருடைய அறையிலிருந்தே செபிக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். இதனால் அவர் தன்னுடைய அறையிலே தங்கி இறைவனிடம் செபித்து வந்தார். அந்த நாட்களில் எல்லாம் (ஏறக்குறைய பதினைந்து ஆண்டுகளுக்கு மேல்) அவர் நற்கருணையை மட்டுமே உண்டு வந்தார்.

இப்படி செபத்திலும் தவத்திலும் தன்னுடைய வாழ்வைச் செலவழித்த ரீட்டா 1457 ஆம் ஆண்டு இறையடி சேர்ந்தார். 1900 ஆம் ஆண்டு திருத்தந்தை பதிமூன்றாம் சிங்கராயர் இவர் புனிதராக உயர்த்தப்பட்டார். திருமணம் செய்துகொள்ள இருக்கும் பெண்கள் புனித ரீட்டாவிடம் செபித்தால் நல்ல கணவர் கிடைப்பார் என்பது ஒரு நம்பிக்கை.

நற்பணி **செங்கோல்மேரி**, காளையார்கோவில்

நற்செய்திப் பணிக்குழுவின்
இணைய தளம்
www.arulchandrunilayam.org




சேவையை பெறுதல் என்பது இறைவனுக்கே பிடித்த அன்பின் மொழியாகும். இந்த அன்பின் மொழியை பிடிக்காதவர் யாரும் இல்லை. ஆனால் ஒரு சிலருக்கு இதுவே அவர் களின் பிரதான அன்பின் மொழியாகிறது.

இறைவனே வியக்கும் சேவை:

முன்னொரு காலத்தில் வேங்கைபுரி என்ற நாட்டை வேந்தன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவர் தமது நாட்டில் இறைவனுக்காக மிகப் பெரிய ஆலயம் ஒன்றை அமைக்க எண்ணினார். இதுவரை எவருமே கட்டியிராதவாறு மிக அழகிய கோயில் கட்டுவதன் மூலம் தமது புகழ் பல்லாண்டு காலம் புகழுடன் விளங்கும் என்பது அவருடைய விருப்பம். இதற்காக நாடெங்கிலுமிருந்து கைதேர்ந்த சிற்பிகளை வரவழைத்தார். கோயில் கட்டுவதற்கான கற்களையும் பாறைகளையும் கொண்டு வரச் செய்தார்.

சிற்பிகள் வேலையைத் தொடங்கினர். கல்லுளிகளின் ஓசை கேட்கலாயிற்று. கோயில் வேலை துரிதமாக நடைபெற்று வந்தது. மன்னன் நாள்தோறும் கோயில் வேலையை வந்து பார்வையிடுவார். நாளுக்கு நாள் கோயில் கட்டும் வேலை வளர்ச்சி பெறுவது கண்டு உள்ளம் பூரிப்படைந்தான்.

பல நாட்களுக்குப் பின்னர் ஒரு வழியாகக் கோயில் கட்டி முடிந்தது. அழகிய கோபுரமும் கோபுரத்தில் உள்ள சிற்பங்களும் பார்ப்பவர் உள்ளத்தைப் பரவசமடையச் செய்யும்படியாக விளங்கின. மன்னன் இதனைக் கண்டு பூரிப்படைந்தான். கோயில் பணி பூர்த்தியானதும் மிகப் பெரிய சலவைக்கல் ஒன்றில் கோயிலைக் கட்டிய தனது பெயரைப் பொன்னால் பொறிக்கச் சொன்னான். அதனைக் கோபுர வாசற்படியில் எல்லோர் கண்களிலும் படும்படியாகப் பதித்து வைக்கச் சொன்னான்.

அன்று இரவு அரசன் தூங்கிக் கொண்டிருக்கும் போது ஒரு கனவு கண்டான். கனவில் இறைவன் தோன்றினார். மன்னன் கட்டிய கோயிலும் தோன்றியது. அதில் மன்னன் பெயர் பொறிக்கப் பெற்ற சலவைக் கல்லும் இருந்தது.

இறைவன் நேரே மன்னன் பெயர் பொறிக்கப்பட்டிருந்த சலவைக் கல்லின் அருகே சென்றார். மன்னன் பெயரை அழித்துவிட்டு வேறு யாரோ ஒரு பெண்மணியின் பெயரை எழுதிவிட்டுச் சென்றார்.

மன்னன் திடுக்கிட்டுக் கண் விழித்தான். நேரே கோயிலுக்குச் சென்றான். சலவைக் கல்லைப் பார்த்தான். அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஆம். அவன் பெயர் அழிக்கப்பட்டு யாரோ ஊர் பேர் தெரியாத ஒரு பெண்மணியின் பெயர் அதில் பொறிக்கப்பட்டிருந்தது. இதைக் கண்ட அரசனுக்கு ஒருபுறம் அவமானமாகவும் மறுபுறம் வேதனையாகவும் இருந்தது. "இவ்வளவு பாடுபட்டுப் பெரும் பொருள் செலவு செய்து இந்தக் கோயிலைக் கட்டினேன். முடிவில் என்னுடைய பெயர் பொறிக்கப்படாமல் வேறு யாரோ ஒரு பெண்மணியின் பெயர் பொறிக்கப்பட்டிருக்கிறதே!" என்று வேதனையடைந்தான். காவலர்களை அனுப்பி அந்தச் சலவைக் கல்லில் பெயர் பொறித்துள்ள பெண்மணியை எங்கிருந்தாலும் தேடி அழைத்து வருமாறு கட்டளையிட்டான்.

காவலர்களும் நகர் பூராவும் சுற்றித் திரிந்து கடைசியில் ஊருக்கு ஒதுக்குப்புறம் உள்ள ஒரு குடிசையில் தன்னந்தனியாக வசித்து வந்த ஒரு மூதாட்டியை அழைத்து வந்தனர். அவள் பெயர் தான் அந்தச் சலவைக்கல்லில் பொறிக்கப்பட்டிருந்தது.

அந்த மூதாட்டியைப் பார்த்த அரசன். "அந்தச் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டிருக்கும் பெயர் உங்களுடையதுதானா?" என்று கேட்டான்.

கிழவி கண்களை நன்கு துடைத்துக் கொண்டு சலவைக்கல்லைப் பார்த்தாள். பிறகு, "ஆம் அரசே அது என்னுடைய பெயர் தான். தவறுதலாகப் பொறிக்கப் பட்டுவிட்டது போல் இருக்கிறது!"

“இல்லை அம்மா, என் பெயர் தான் முதலில் அந்தச் சலவைக் கல்லில் பொறிக்கப்பட்டது. இறைவனே வந்து என் பெயரை அழித்துவிட்டுத் தங்கள் பெயரை இதில் பொறித்துவிட்டுச் சென்றிருக்கிறார். அதன் காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை,” என்றான் அரசன்.

“நான் இந்தப்பக்கம் வந்தது கூட இல்லை. அப்படியிருக்க இதில் என் பெயர் ஏன் பொறிக்கப்பட்டிருக்கிறது?” என்று வியப்புடன் கேட்டாள் கிழவி.

“தாயே, இந்தக் கோயில் பணியில் நீங்கள் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இறைவன் தங்கள் பெயரை இதில் பொறித்திருக்கமாட்டார். தாங்கள் செய்த தொண்டு என்னவென்று கூறுங்கள்!” என்றான் அரசன்.

நெடுநேரம் யோசனை செய்து பார்த்த கிழவி, “மன்னா! இந்தக் கோயில் பணிக்காக நான் ஒன்றும் செய்யவில்லை. ஆனால், ஒன்று மட்டும் செய்திருக்கிறேன். இந்தக் கோயில் கட்டுவதற்கான கற்கள் மரங்கள் முதலியவற்றை ஏற்றிவரும் வண்டிகள் நாள்தோறும் என் வீட்டுப் பக்கமாகத் தான் வரும். அந்த சமயத்தில் வண்டியோட்டிகளுக்குத் தாகந்தீரத் தண்ணீர் கொடுப்பேன்; மோர் கொடுப்பேன். குதிரைகளுக்குச் சிறிது புற்களை கொடுத்து தண்ணீர் காட்டுவேன். அவ்வளவுதான் நான் செய்தது.” என்றாள் கிழவி.

“தாயே! நான் வெறும் புகழுக்காக இந்தக் கோயிலைக் கட்டினேன். தாங்களோ புகழை விரும்பாமல் தொண்டு செய்தீர்கள். எனவே, தான் என் பெயரை அழித்துவிட்டு இறைவன் தங்கள் பெயரைப் பொறித்துள்ளார். தன்னலமற்ற தங்கள் தொண்டினை இந்தக் கோயிலில் உள்ள சலவைக்கல் என்றென்றும் எடுத்துக் காட்டும். வாழ்க தங்கள் புகழ்!” என்று கூறிய மன்னன், அந்தக் கிழவிக்கு நிறைய பொருள் பரிசாகக் கொடுத்து அனுப்பினான்.

**வாழ்வளிக்கும் சேவை:**

சேவை என்பது அன்பின் வெளிப்பாடு. சேவை மனப்பான்மை கொண்ட பலர் நம்மை சுற்றி இருப்பதால்தான். நாம் அனைவரும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எங்கோ ஒருவர் சேவை செய்து கொண்டிருப்பதால் நாம் இங்கே மகிழ்வோடு வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதுதான் உண்மை.

**விவிலிய பின்னணி :**

1.மனுமகன் பணிவிடை பெற அன்று மாறாக பணிவிடை புரியவே வந்துள்ளார். (மாற்கு 10:45)

2.முழுமனதோடு இறைவனுக்கு தொண்டாற்றுவதுபோல் மனிதர்களுக்கும் தொண்டு செய்யுங்கள் (எபேசியர் 6:7).

3.உங்கள் விருப்பத்தை மட்டும் பொருட்படுத்தாமல் மற்றவரின் விருப்பத்தையும் கருத்தில் கொள்ளுங்க (பிலிப்பியர் 2:5).

**நடைமுறை செயலூக்கம்:**

1. வேலையில் உதவுங்கள்: நமது அன்பினியவர்கள் வேலைபழுவோடு இருக்கும் போது அவர்களுக்கு நமது சேவையை வழங்கலாம்.

2. இலக்கை அடைய உதவுங்கள்: நமது அன்புக்கினியவர்களின் இலக்கை அறிந்து கொண்டு அதை அவர்கள் அடைய உதவலாம்.

3. பாராட்டை வெளிப்படுத்துங்கள்: நமது அன்பினியவர்கள் நமக்காக சேவை செய்ய சிறத்தை எடுக்கும் போது அவர்களை பாராட்ட வேண்டும்.

**அசைபோட அரை நிமிடம்:**

தேவை அறிந்த சேவை இறைவனின் மொழி.

**சகோ. S.ஜான் ஜோ பிரபாகர். SHJ.**
மனநல ஆற்றுபடுத்துநர், பரமக்குடி.

## யூபில் ஆண்டில் என்னை மன்னியும்

- உன் கோட்டைக்குள் அமைதி நிலவுவதாக. உன் மாளிகைகளில் நல்வாழ்வு இருப்பதாக என்ற வாக்குறுதியை மறந்து அமைதியை தவறான இடங்களிலும், பழக்க வழக்கங்களிலும் தேடியதை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (திபா 122:7).
- அஞ்சாதே, நான் உன்னை மீட்டுக் கொண்டேன். உன் பெயரைச் சொல்லி உன்னை அழைத்தேன். நீ எனக்கு உரியவன் என்பதை மறந்து நான் கடவுளுக்கு உரியவன் எனவே எனக்கு எந்த கவலையும் இல்லை என்று எண்ணாமல் மன பாரத்தோடு வாழ்ந்து வந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (எசா 43:1).
- பொய்யரின் நடுவில் நான் அமர்வதில்லை. வஞ்சகரோடு நான் சேர்வதில்லை என்பதை அறிந்தும் தவறானவர்களோடும் தீய நண்பர்களோடும் சேர்ந்து வாழ்வை வீணடித்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (திபா 26:4).
- கடவுள் நமக்கு அடைக்கலமும் ஆற்றலுமாய் உள்ளார். இடுக்குற்ற வேளையில் நமக்கு உற்ற துணையும் அவரே என்பதை மறந்து துன்புறும் வேளையில் ஆண்டவரின் வளமைமிகு பராமரிப்பில் நம்பிக்கை இழந்து மனிதர்களிடம் நம்பிக்கை வைத்து வாழ்ந்து வந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (திபா 46:1)..

நற்பணி S.P. **சவரிமுத்து**, இராம்நகர்

## செப வீரர்களுக்கு

இம்மாத செபக் கருத்து

- மனித உழைப்பு மதிக்கப்படவும் அதனால் குடும்பங்கள் வாழ்வாதாரத்தை நிறைவாக பெறவும்
- தொழிலாளர்கள் மாண்புடனும், நீதியுடனும் நடத்தப்பட
- வேலைவாய்ப்பின்றி அல்லறும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்க அரசுகள் முனைப்புடன் செயல்பட
- கோடை வெயிலின் பாதிப்புகளிலிருந்து ஏழைகளும், உயிரினங்களும் பாதுகாக்கப்பட
- தேர்வு முடிவுகளை எதிர்பார்த்து காத்திருக்கும் 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் மன திடத்துடன் முடிவுகளை எதிர்கொள்ள
- உலகில் போர்சூழல் மாறி அமைதி நிலவ
- இந்தியாவில் சனநாயக, மதச்சார்பின்னை, கூட்டாச்சி கொள்கைகள் பேணி காக்கப்படவும் பிரிவினை உண்டாக்கும் காரணிகள் வேரறுக்கப்படவும்
- காஷ்மீர் தீவிரவாதிகளால் அமைதியிலந்த பள்ளத்தாக்கில் மீண்டும் அமைதி திரும்ப.
- விண்ணகப் பிறப்பிடைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ஆன்மா இறைவனில் இளைபாற்றியடையவும்
- ஆவியானவரின் துணையுடன் காலத்திற்கேற்ற புதிய திருத்தந்தை தேர்ந்தெடுக்கப்படவும்

**விரும்பத்தக்க செயல்பாடு:**

- யூபிலி ஆண்டில் எதிர்நோக்கு என்ன என்பதை ஆழமாய் புரிந்துகொள்ள தொடர்புடைய விவிலியப் பகுதிகளை வாசித்து தியானித்தல் பிறரோடு பகிரிந்து கொள்ளுதல்.

# விண்ணகப் பிறப்பு

நன்று, நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளரே, உம் தலைவனாகிய என் மகிழ்ச்சியில் நீரும் வந்து பங்குகொள்ளும். (மத் 25:21)



மண்ணில்
17.12.1936

விண்ணில்
21.04.2025


## திருத்தந்தை பிரான்சிஸ்

*இயேசுவின் சீடராய், எழுச்சிமிகு நம்பிக்கையாளராய்,*
*இயேசு சபைத் துறவியாய், ஏழைகளின் தோழனாய்*
*இயற்கையின் காவலனாய், திருஅவையின் உண்மைப் பணியாளராய்*
*இகமதில் வாழ்ந்து, பயணித்து, பாங்குடன் பணியாற்றினீர்,*
*இறைபதத்தில் நாளும் வாழ்ந்திட மகிழ்வுடன் சென்றிடுவீரே!*

**சிவகங்கை மறைமாவட்ட நற்செய்திப் பணியாளர்கள்**

படங்களைக் கொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?
படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.
துப்பு வேண்டுமா? **திருத்தூதர் பணி 2,3,4 அதிகாரங்களுக்குள்**








**தவக்கால களப்பணி திறனாய்வு**









(தனிச்சுற்றுக்கு மட்டும்)

**Narseithi Paniyalar**

is published on behalf of the Commission for Proclamation,
Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram,
Paramakudi - 623 707, Ramnad Dist.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com




























தவக்கால களப்பணி















